இணைப்பு—III

(406 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 24—சிறைச்சாலைகள் [உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை]

அறிவிப்புகள்

1. மதுரை மத்திய சிறையில் தற்போதுள்ள நோயாளர் ஊர்திக்குப் பதிலாக ரூபாய் 6.80 இலட்சம் செலவில் புதிய நோயாளர் ஊர்தி ஒன்று வழங்கப்படும்.

2. நாகர்கோவில் மற்றும் திண்டுக்கல் மாவட்ட சிறைகளுக்கு ரூபாய் 9.48 இலட்சம் செலவில் இரண்டு ஜீப்புகள் வழங்கப்படும்.

3. சிறைத் துறைப் பணியாளர்களுக்கு ரூபாய் 16.36 இலட்சம் செலவில் கணினிப் பயிற்சி அளிக்கப்படும்.

4. சிறைவாசிகளின் நேரத்தைப் பயனுள்ள முறையில் செலவிடவும், தானே சுயமாக சம்பாதித்து ஊதியம் பெறுவதோடு மன நிறைவையும் தன்னம்பிக்கையையும் ஏற்படுத்தும் நோக்கத்தில், கோவை மத்திய சிறையில் உள்ள சிறைவாசிகளுக்கு தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் ஒத்துழைப்புடன் திருப்பூரில் உள்ள பனியன் தொழிற்சாலைகளில் ஏற்படும் பனியன் கழிவுகளிலிருந்து நூலைப் பிரித்தெடுக்கும் பயிற்சியளிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS